**O.S.No. 256/2017**

**Date 11.06.2025**

**வா.சா.2 செல்லம்மாள்**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால்? சரிதான். வாதி எனது கணவரின் உடன்பிறந்த சகோதரரின் மகன் என்றால்? சரிதான். வாதி யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால்? சரிதான். வாதி எந்த சொத்திற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் எனக்குதெரியாது என்றால்? சரிதான். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை சாட்சிய விவரங்கள் குறித்து எனக்கு தெரியாது என்றால் ? சரிதான். வாதிக்கு தாவா சொத்துக்கள் எந்ததெந்த கிரைய ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வாதியின் தந்தை எவ்வாறு எப்படி கிரையம் பெற்றார் என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால்? சரிதான். வாதிக்கு அவருடைய தகப்பனார் எழுதிகொடுத்த சொத்து விவரங்கள் குறித்து எனக்கு தெரியும். தாவா சொத்தின் கிழமேல் அளவு தென்வடல் அளவு குறித்து எனக்கு தெரியாது என்றால்? சரிதான். செண்ட் கணக்கு தான் தெரியும். வாதியின் வீட்டிற்கு மேல்பக்கம் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது. 1ம் பிரதிவாதி மாரியப்பனுக்கு கிரையம் மூலம் பத்தேமுக்கால் செண்ட் இடம் வாதியின் இடத்திற்கு மேற்கு வாங்கியுள்ளார் என்றால்? சரிதான். எனக்கு வழக்கின் விவரங்கள் தெரியாது என்றாலும், வாதி எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர் என்பதாலும், எந்த விவரங்களும் தெரியாமல் முதல் விசாரணை சாட்சியம் தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்? சரியல்ல. 1ம் பிரதிவாதி மாரியப்பன் காது கேட்காதவர், வாய்பேசாதவர் என்றால்? சரிதான்.

**ம.வி இல்லை.**